இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்வி முதுமாணி
இறுதிப் பரீட்சை – 2007
**ESP 2311** – கல்வியின் உளவியல் அடிப்படை
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 07.07.2007 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

மூன்று(03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1. "மனிதன் இந்த உலகத்துக்கு வரும்போது இயற்கையை (Nature) மாத்திரமே கொண்டு வருகிறான். அவனது பிறப்புக்குப் பின்னர் அவனில் செல்வாக்கு செலுத்துவதும் பின்னர் அவனைப் பாதிப்பதும் அவனது வளர்ப்பு (Nurture) தான்". (Francis Galton, 1974)

    (i) பிறப்புக்கு முந்திய சிசு பருவத்தின் (prenatal) விருத்தி தொடர்பில் இந்த கூற்றினை ஆராய்க.

    (10 புள்ளிகள்)

    (ii) விருத்தி சார் உளவியலாளர்களின் கருத்தின்படி பிள்ளையின் அறிகை விருத்தியில் இயற்கையினதும் வளர்ப்பினதும் வகிபங்கை விளக்குக.

    (10 புள்ளிகள்)

    (iii) ஒருவரது ஆளுமை விருத்தியில் அவரது பெற்றார் கொண்டுள்ள செல்வாக்கினை நுணுக்கமாக பகுப்பாய்வு செய்க.

    (10 புள்ளிகள்)

2. "இணைந்து கற்றல் (Learning by association) என்பது பன்னெடுங்காலமாக விவாதிக்கப்பட்டு வந்தபோதிலும் இத் தோற்றப்பாட்டினை இவான் பவ்லோவினால் மட்டுமே உறுதி செய்ய முடிந்தமை நிபந்தனைப்பாடு பற்றிய அவரது பிரசித்தி பெற்ற ஆய்வுகளின் மூலமேயாகும்" (Myers, 2004).

    (i) "கற்றல்" என்பதை வரைவிலக்கணப்படுத்தி கற்றல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விளங்கிக் கொள்ள பவ்லோவ்வின் பழைய நிபந்தனைப் பாட்டுக்கோட்பாடு (Classical Conditioning Theory) எவ்வாறு முக்கியமான அடிப்படையாக அமைகிறது என்பதை விளக்குக.

    (10 புள்ளிகள்)

    (ii) ஸ்கின்னரின் தொழிலிசார் நிபந்தனைப்பாட்டுக் கோட்பாடு பவ்லோவின் கோட்பாட்டிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விளக்குக.

    (10 புள்ளிகள்)

    (iii) கள அறிகை கோட்பாடுகளின் (Field Cognitive Theories) அடிப்படையில் எவ்வாறு கற்றல் நடைபெறுகிறது என்பதை விளக்குக.

    (10 புள்ளிகள்)

3. (i) "மனித ஊக்கல் தொடர்பாக கூடிய உடன்பாடும் மேம்பாடும் கொண்ட அம்சங்களை மாஸ்லோ அழுத்திக் கூறியுள்ளார்".

இக் கூற்றினை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? தங்களது விடைக்கு மூன்று(03) காரணங்கள் தருக.

(05 புள்ளிகள்)

(ii) வகுப்பறையில் மாணவர்களின் செயலாற்றுகையைத் தீர்மானிப்பதில் இலக்கு அமைப்பதும் (goal setting) இலக்கு அர்ப்பணிப்பும் (goal commitment) சமமான முக்கியத்துவம் கொண்டவை என்பதை உதாரணங்களுடன் பரிசீலனை செய்க.

(10 புள்ளிகள்)

(iii) வகுப்பறையில் தனது மாணவர்களை ஊக்கப்படுத்த இவ்விரண்டு கொள்கைகளையும் எவ்வாறு ஓர் ஆசிரியர் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை விபரிக்குக.

(05 புள்ளிகள்)

4. (i) சிக்மன் பிராய்டின் உளப்பகுப்பாய்வு அணுகுமுறையின் படி ஒருவரது ஆளுமை விருத்தியை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ii) பிராய்டின் ஆளுமை விருத்திக் கட்டங்களை கார்ல் றொஜர்ஸ் (Carl Rogers) இன் ஆளுமை அபிவிருத்திக் கட்டங்களுடன் ஒப்பிடுக.

(அ) கட்டங்கள்
(ஆ) முக்கியமான பண்புகள்

(10 புள்ளிகள்)

(iii) பிராய்டின் கோட்பாட்டின்படி ஒருவர் முகம் கொடுக்கும் ஆளுமைவிருத்தி பிரச்சினைகளில் மூன்றினை(03) ஆராய்க.

(10 புள்ளிகள்)

5. (i) வளர்ந்தோர் கற்றல் பாங்குகள் பிள்ளைகளின் கற்றல் பாங்குகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.

(15 புள்ளிகள்)

(ii) இலங்கையில் 21–35 வயதுப்பிரிவில் வளர்ந்தோர் கற்றலை வசதிப் படுத்துவதற்கு கையாளக்கூடிய மூன்று(3) முறைகளை பரிசீலனை செய்க.

(15 புள்ளிகள்)

6. (i) “விசேட தேவைகள் உள்ள பிள்ளைகள்” என்னும் தொடரை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ii) விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளில் ஏதேனும் இரண்டு வகுதியினரை தெரிவு செய்து அவர்களது பண்புகளை விபரிக்குக.

(15 புள்ளிகள்)

(iii) இவர்களுக்கு சாதாரண வகுப்பறையில் எவ்வாறு நீங்கள் உதவி செய்யலாம் என்பதை உதாரணம் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

7. சிறு குறிப்புகள் எழுதுக.

(i) பிள்ளைப் பருவத்தில் எண்ணக்கரு உருவாக்கம்

(ii) ஆரம்ப பிள்ளைப்பருவத்தில் ஒழுக்க விருத்தி

(iii) வாழ்க்கைக்கால அபிவிருத்திசார் (life span development) அணுகுமுறை

(10 x 3 = 30 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)